## கடற்கரை கவியரங்கு எண் - 617

நாள் 04-09-2022

# மனமே எழுக!

இயன்நிலை வாழ்வில் இன்பம் என்றும் நிலைத்திடுமோ?
பயன் தனைத் தேடியே பகுத்து வாழ்பவர் மகிழ்வரோ?
புயல்மழை போல் வரும் துன்பங்கள் தாமும் நிலைபெறுமோ!
வயல்வெளி வாழும் புள்ளினங்கள் காலமறிந்து செயல்படுமே!

இயன்நிலை வாழ்வில் நாளும் ஏங்கித் தவிப்பது மானுடமே!
அயலவர் தம்நிலை நோக்குவார் என்பதாய்க் கூவிடுமே!
கயல்போல் துள்ளி, கன்றாய் வாழத் தெரியாதோர் இனமே!
இயலில் இசையாய் இசைபட வாழச் சொன்னது தமிழினமே!

-வேறு-

இடவலம் தேடாச் சிந்தையுடன் இனிமையாக வாழ்ந்திடலாம்!
தடமாய் அறிவுதனைச் செய்தே தண்மையாக வாழ்ந்திடுவோம்!
முடமாய் போகும் நிலையின்றி முழுமையே நாம் கொள்வோம்!
அடமாகும் சிந்தையை அகற்றி, அன்பில்நாம் நிலையாவோம்!

புன்னகை வாழ்வின் புனலாய் பொங்கிடநாம் செய்திடுவோம்!
தன்னிகரில்லா பண்புடனே தரணியில் மகிழ்வோம் நாளுமே!
மன்னிய மரபுகள் காத்திடவேநாம் மகிழ்வுடன் செயல்படுவோம்!
அன்பே வாழ்வின் நிலையென்று மனத்தில்நாம் ஏற்றிடுவோம்!

- கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்
04-09-2022 (12.45 PM)

